பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 18 | சனிக்கிழமை | 03.08.2024 | அதிர்வு 001

## சஜித்தை ஆதரிப்பதற்கு மனோ அணி இணக்கம்



வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கான ஆரம்பகட்ட 06



# இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும்!

## நல்லிணக்கமும் சமத்துவமும் மிகவும் முக்கியமானவை என்று யாழ்ப்பாணத்தில் நேற்று ஜனாதிபதி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல் மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில்கொள்ள வேண்டும்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 04

## எவர் வெளியேறினாலும் மொட்டுக் கட்சி அழியாதாம்

### மஹிந்தவின் சகா கூறுகின்றார்



"மொட்டுக் கட்சியின் இருப்பு என்பது மஹிந்த ராஜபக்ஷ விடம்தான் தங்கியுள்ளது. எனவே, எவர் கட்சியை விட்டு வெளியேறனாலும் கட்சி வீழ்ச்சியடையாது. ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் வெல்வோம்." 06




நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட எம்.பியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் சந்தித்தபோது, தற்போது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் அவரின் கருத்துக்களை ஜனாதிபதி கேட்டு அறிந்தார் என நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

ஜனாதிபதி செயலகத்துக்கு சுமந்திரன் சென்ற போது அங்கிருந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா 06





# யாழ். மக்களின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வு வழங்க 'யாழ் நதி' திட்டம் விரைவில் ஆரம்பம்

## அடுத்த 10 வருடங்களுக்குள் வடக்கு அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"வடக்கில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. எனவே, தற்போது அனைவரும் ஒன்றிணைந்து அபிவிருத்திப் போரை ஆரம்பிப்போம்." – என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர் வரும் 05 – 10 வருடங்களில் வடக்கை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றுவதே தமது நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளை யடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில்கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நீர் வழங்கல் திட்டம் விரைவில் ஆரம்பிக் கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, யாழ்ப்பாணம் – கிளி நொச்சி நீர் திட்டம் மற்றும் 'யாழ்.நதி' மூலம் வடக்கின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வுகளை வழங்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் நிலையமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியின் குடிநீர்த் தேவை களைப் பூர்த்தி செய்வதற்காக, இலங்கை அரசு 2011 ஆம் ஆண்டில் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மட்டத்தில் 2.5 மில்லியன் நீர் இணைப்புகள் காணப்படும் நிலையில் இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் 60 ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 3 இலட்சம் மக்களுக் குச் சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் வழங்குவதும் 80 ஆயிரம் பேருக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

உப்பு நீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந் தம் 2017 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைசாத்திடப்பட்டது. இதுவரை, இருபது உயரமான நீர்த் தொட்டிகள் அமைத்தல், 186 கி.மீ பரிமாற்ற குழாய்கள் மற்றும் 382 கி.மீ. விநியோகக் குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

உப்புநீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் 2021 ஜனவரியில் கையளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 266 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்புத் திட்டம் 2025 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு மேலும் கருத் துத் தெரிவிக்கையில்,

"இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கக் காணி வழங்கி மக்களுக்கு நன்றி. தாளையடி பகுதிக்கு தனியான தொரு கிராம சேவகர் பிரிவை நிறுவுமாறு மக்கள் கோரி யுள்ளனர். அதனைச் செய்யுமாறு ஆளுநருக்கு பணிப்புரை விடுப்பேன். இந்தச் சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை வழங்கும்.

எதிர்காலத்தில் வலவ கங்கை நீர்த்திட்டத்தையும் ஆரம்பிப் போம், அதனால் பூநகரிக்கு நீர் கிடைக்கும். அதேபோல் யாழ். நதி நீர் திட்டத்தை ஆரம்பிப்போம். இந்த திட்டங்கள் வந்தால் யாழில் நீர் பிரச்சினை இருக்காது. வடமராட்சி செழிப்பான பிரதேசமாக மாறும்.

இந்த நீருக்கு நாம் கட்டணம் செலுத்த வேண்டும். அதனால் சூரிய சக்தியைப் பயன்படுத்தி கட்டணத்தை குறைப்பதற் கான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த பகுதிக்கு நீர் வழங்கல் முறைகளை செயற்படுத்தி நவீன விவசாயத்தை செயற்படுத்துவோம். நீருக்கு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் ஒவ்வொரு லீட்டரிலும் உச்ச பயனை அடைய வேண்டும்.

'யாழ் நதி' திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். காங்கேசன்துறை துறைமுகத்தை அபி விருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சீமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலய மொன்று ஆரம்பிக்கப்படும், பூநகரியிலும் அதனை செய் வோம். பலாலியில் சுற்றுலா துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரிய சக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற் பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அடுத்த 5 -10 வருடங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். அதேநேரம் மத்திய அரசு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நிர்மாணப் பணி களை மேற்கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளது. மாகாண சபையால் அதனைச் செய்ய முடியும். எனவே, நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். வங்குரோத்து நிலையிலும் இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள், சீன எக்ஸிம் வங்கி, பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை

தொடர்ச்சி▼







# யாழ். மக்களின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வு வழங்க ‘யாழ் நதி’ திட்டம் விரைவில் ஆரம்பம்

## அடுத்த 10 வருடங்களுக்குள் வடக்கு அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

எட்டியுள்ளோம். அதனால் வெளிநாட்டுக் கடன்கள் எமக்குக் கிடைக்கும். ஜப்பான் அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளது. மற்றைய நாடுகளுடனும் அந்த இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவோம்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேசிய போது எட்டப்பட்ட உடன்பாடுகளை கைசாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்திச் செயற்பாடுகளுக்காக அமுல், கார்கில்ஸ் நிறுவனங்களுடன் ஆலோசிக்கின்றோம். தற்போது நாட்டுக்குள் பண புழக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இதனை தக்க வைத்துக் கொள்ள செல்ல வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் வேளையில், யாழ்ப்பாணமும் பொருளாதாரத்தின் முக்கிய பகுதியாக மாறும்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றி. தோட்டப் பகுதிகளைக் கிராமங்களாக பிரகடனப்படுத்தும் பணிகளையும் அவரோடு இணைந்து முன்னெடுப்போம். எதிர்காலத்தில் இவ்வாறான பல பணிகளை செய்யவுள்ளோம்.” – என்றார்.

இந்த நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ளஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்ன், அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.













## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாண மக்கள் நீண்டகால மாகப் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வரு கின்ற போதிலும், அந்த மாகாணத்தில் பாரிய பொருளா தாரத் திறன் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டிய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க, அந்தச் சந்தர்ப்பங்களை வடக்கு மாகாணம் உட்பட முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் காகப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவித் தார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தல் மேடைகளில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி விட்டு அவற்றை நிறைவேற்றக் கடன் பெற்றதாலேயே நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சிய டைந்துள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, அதே தவறை மீண்டும் நடக்க அனுமதிக்காமல் புதிய பொருளாதார மற்றும் அரசியல் முறையில் முன்னேறிச் செல்வதற்கு பங்களிப்பது நாட்டிலுள்ள அனைத்து கல்வியியலாளர்கள், தொழில் வல் லுநர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஏனையவர்க ளின் பொறுப்பாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஊக்குவிப்பதற்கான முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய ஜனா திபதி, எதிர்வரும் காலங்களில் தமிழ் நாட்டில் ஏற்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சியுடன், மற்றவர்களுக்கு இல்லாத வாய்ப்புகள் தமிழ் பேசும் இலங்கையர்களுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் வரி விதிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் அதன்பின்னர் வந்த அரசு தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் வரிகளைக் குறைத்தது. இது அரசாங்க வருவாய் குறைவதற்கு வழிவகுத்தது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, அந்தத் தவறை நாம் மீண்டும் செய்ய முடியாது. ஒரு நாடாக நாம் முன்னேறும்போது, நமது அரசியல் முறைமையையும் மாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் தயாராக இருக்கவில்லை. நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் திறன் கொண்ட ஒருவரைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. அன்றைய ஜனாதிபதி வெளியேறிய பின்னர், நான் பதவி விலகுவதாகச் சொன்னேன். ஆனால், யாரும் பொறுப்பை ஏற்க விரும்ப வில்லை. நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப் பானது கடன் வாங்குதல் மற்றும் போலி வாக்குறுதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது அப்போது புரிந்தது.

நமது அரசியல் முறைமையைக் கருத்தில் கொண்டு வலு வான தீர்மானங்களை எடுக்க வேண்டும். நல்ல எதிர்காலத் துக்காக நாட்டுக்குப் புதிய அரசியல் முறைமையொன்று தேவை. அந்த அரசியல் முறைமையைத் தலைமைத்துவத் துக்கு மட்டும் மட்டுப்படுத்தக் கூடாது. பொறுப்பை ஏற்கக்கூடிய தைரியமான தலைவர்களே நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். அத்தோடு இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும். பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்களுக்கும் முதன்மை இடம் கிடைத்தாலும், அனைவரையும் சமமாக நடத்துதல் மற்றும் பாலினச் சமத்துவம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது கருத்தில்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான சிங்கள, பௌத்த மக்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தாலும், அனைவரையும் சமமாக நடத் துவது மிகவும் அவசியம் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். இதில் இன மற்றும் மத குழுக்களிடையே சமத்து வம் மற்றும் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையே சமத் துவம் உள்ளது.

நாட்டில் ஒருபாதியாக இருக்கும் பெண்களுக்கு நாடாளுமன் றத்தில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை. இதற்கு நாம்

தொடர்ச்சி▼





## இனப்பிரச்சினைக்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

தீர்வு காண வேண்டும். சிங்கள மொழியையும் தமிழ் மொழியையும் நாம் ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஏற்படப்போகும் பொருளாதார வளர்ச்சியால் தமிழ் பேசும் இலங்கையர்களுக்கு மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்புகள் கிடைக்கும்.

மேலும் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் ஒன்றாக அபிவிருத்தி செய்ய வேண்டும். நான் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இருந்த போதிலும் பின்னர் அது பின்தங்கிப் போனது. இப்போது போர் முடிந்துவிட்டது. எனவே, யாழ்ப்பாணத்தையும் வடக்கு மாகாணத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளது.

வறுமை ஒழிப்பு, விவசாய நவீனமயமாக்கல் போன்ற பிராந்திய அபிவிருத்திக்காக மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும்.

தேசிய காணி ஆணைக்குழு மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்பனவற்றை வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கின்றோம். பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்து, மாகாண சபையிலும் நாடாளுமன்றத்திலும் ஒரே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணியாற்றுவதற்கு இடமளிக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் மத்திய அரசும், மாகாண நிர்வாகப் பொறிமுறையும் இணைக்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, விவசாயம் ஆகியவற்றில் யாழ்ப்பாணம் பெரும் திறனைக் கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவுடன் தரைமார்க்க இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்து நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாண மக்கள் நீண்டகாலமாக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தனர். ஆனால், இந்த மாகாணத்தில் நாம் பயன்படுத்த வேண்டிய பாரிய வளங்கள் உள்ளன. பழைய முறையில் முன்னேறிச் செல்ல முடியாது. நல்ல எதிர்காலத்திற்காக தற்போதுள்ள முறைமை மாற்றப்பட வேண்டும். அதற்கு பங்களிப்பை வழங்குவது, மருத்துவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் என்ற வகையில் நீங்கள் முன்னோடியாவிருந்து பங்களிப்பை வழங்க வேண்டும்.

புதிய இலங்கைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டில் நாங்கள் எதிர்கொண்ட சிரமங்கள் கடுமையானவை. இருந்தாலும், நாம் அதை உறுதியுடன் எதிர்கொண்டோம். நமது நாட்டை முன்னேற்றும் சவாலை வெல்வோம். அனைவரும் ஒன்றுபட்டு புதிய பயணத்தைத் தொடர்வோம் என்று அழைப்பு விடுக்கின்றேன்." - என்றார்.

தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி இதன்போது சாதகமான பதில்களை வழங்கியதுடன், நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கான யோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அபேவர்த்தனா வெளியேறிக் கொண்டிருந்தமையை கண்டார். ஜனாதிபதியை அவர் நேரில் வந்து சந்தித்து விட்டு செல்கின்றார் என்பதை சுமந்திரன் ஊகித்துக் கொண்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியை சுமந்திரன் சந்தித்தபோது அது பற்றித்தான் முதலில் ரணில் விக்கிரமசிங்க பிரஸ்தாபித்தார்.

"இப்போதுதான் சபாநாயகர் என்னை வந்து சந்தித்து விட்டுப் போகின்றார். நான் பிரதம நீதியரசருடன் தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசினேன். ஆனால் அவர் இவ்விடயம் குறித்து சபாநாயகருடன் உரையாட மறுத்துவிட்டார்." – என்ற சாரப்பட கருத்துரைத்தார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

"பிரதம நீதியரசர் செய்தது சரிதானே...! உயர்நீதிமன்ற ஆயம் ஒன்று இவ்விடயத்தில் உத்தரவு ஒன்றை வழங்கியிருக்கின்றது. அதை மாற்றுவது, திருத்துவது அல்லது வேறுபடுத்துவது தொடர்பான ஓர் ஏற்பாடு குறித்து யாருடனும் பிரதம நீதியரசர் பேசுவது என்பது தவறு. உயர் நீதிமன்றத்திற்கு அது இழுக்கு. ஆகவே அத்தகைய தீர்ப்பை மாற்றும் முயற்சியில் சம்பந்தப்படுவதன் மூலம் தன்னுடைய உயர்நீதிமன்றத்தின் தகைமையை கீழிறக்க அவர் இசைய மாட்டார். உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவது ஒன்றுதான் இதில் உள்ள சட்டரீதியான அணுகுமுறையாக இருக்க முடியும்" என்று விளக்கினார் சுமந்திரன்.

அதற்கு இசைய மறுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

"பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும்படி உயர் நீதிமன்றம் எனக்கு பரிந்துரைத்துள்ளது. ஆனால் இப்போது ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. அச்சமயத்தில் நான் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமித்தால் அது பின்னர் எனக்கு எதிரான தேர்தல் ஆட்சேப வழக்குக்கு வழி செய்யாதா?" – என்று கேட்டார் ஜனாதிபதி.

"இல்லை. நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டாலும், அச்சமயம் பொலிஸ்மா அதிபர் பதவி போன்ற ஒரு பதவிக்கு வெற்றிடம் வந்தால் அதற்கு உரியவரை நியமிக்க வேண்டியவர் நீங்கள் தான். வேறு யாரும் அல்லர். இப்போது, இதுவரையில் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்தவரின் நியமனத்தை உயர் நீதிமன்றம் இடைநிறுத்திமையால் அந்த வெற்றிடம் வந்துள்ளது. மாறாக, அப்பதவியில் இருந்தவர் தாமாக பதவி விலகினால் அல்லது உயிரிழந்தால் என்ன செய்வீர்கள்? புதியவரை நியமித்துத் தானேயாக வேண்டும்? 'நான் தேர்தலில் போட்டியிடுகிறேன், நியமனம் செய்தால் பின்னர் தேர்தல் ஆட்சேபனை வழக்கு வரலாம், ஆகவே நியமனம் செய்ய மாட்டேன்' என்று நீங்கள் அடம் பிடிக்க முடியாது. நியமனம் செய்தாகத்தான் வேண்டும். இப்போதும் கூட இவ்விடயத்தில் உங்களுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை வழக்கு பின்னர் வரலாம் என்று நீங்கள் கருதினால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அவர்களை பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு ஒரு பெயரை உங்களுக்குப் பரிந்துரைக்கும்படி கூறுங்கள். அவர்கள் பரிந்துரைக்கும் பெயரை அந்தப் பதவிக்காக அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அறிவியுங்கள். அதனை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்ததும் அவரை பதில் பொலிஸ்மா அதிபராக நியமியுங்கள். அப்படிச் செய்தால் பிற்காலத்தில் யாரும் அதனை உங்கள் முடிவாகக் காட்டி, உங்களுக்கு எதிராக வழக்கு போட முடியாது." – என்று ஆலோசனை வழங்கினார் சுமந்திரன்.

தலையாட்டி அந்த சட்ட ஆலோசனையை ஏற்றுக் கொண்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் அந்த ஆலோசனையைத் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுவார் என்று நம்ப முடியாது.

'ரைட்டுக்கு' திரும்புவதாக 'சிக்னல்' போட்டு விட்டு, கடைசி நேரத்தில் 'லெப்ட்டுக்கு' மடக்கி வெட்டும் அரசியல் குழப்பக்கார பேர்வழி ரணில் விக்கிரமசிங்க.

அவருடைய விடயத்தை பொறுத்தவரை அவர் செய்து கொள்ளும் போது தான் அதனைக் கண்டு கொள்ள வேண்டும். அதற்கு முன்னர் அவர் இப்படித்தான் செய்வார் என்று ஊகிப்பது பெரும்பாலும் சரியாக வராது என்பதுதான் உண்மை.

## சஜித்தை ஆதரிப்பதற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணக்கப்பாட்டை தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொண்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் உயர்பீடக் கூட்டம் நேற்று இடம் பெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

மேலும் மலையக மக்கள் சார்ந்த பல்வேறு அம்சங்கள் அடங்கிய யோசனைத்திட்டம் ஒன்றையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியில் சமர்ப்பித்து பேச்சு நடத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த யோசனைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் ஆழமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த யோசனைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை, சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க வேண்டும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரவுள்ளது.

குறித்த விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டால், எதிர்வரும் 8 திகதி ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நேற்றைய அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## எவர் வெளியேறினாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்த ராஜபக்ஷவின் படத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் வந்தவர்களே கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். அவர்கள் அவ்வாறு செயற்பட்டாலும் மக்களும், கட்சி ஆதரவாளர்களும் கட்சியுடன்தான் நிற்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவிடம்தான் கட்சி இருப்பு உள்ளது. எனவே, யார் வெளியேறினாலும் கட்சி விழாது. சிலர் அரசியல் நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். அது விரைவில் தெரியவரும்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம்தான் வெல்வோம். புதிய வாக்குகளைப் பெறக்கூடிய வேட்பாளர் எமது வசமே உள்ளார். ஏனைய வேட்பாளர்களுக்கு புதிய வாக்காளர்களின் வாக்குகளைப் பெற முடியாது." – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முட்டாள்தன வழிகாட்டல்

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரேரித்துள்ள திட்டம் நீதித்துறையுடன் சின்னத்தனமாக விளையாடும் விவகாரம் போல தோற்றுகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி வழிப்படுத்தும் அணுகுமுறை உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் பெரும் இழுபறியாக மாறக் கூடியது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டிருக்கின்றமை கவனிக்கத் தக்கது.

நீதித்துறை முறைமைகள், அவற்றைக் கையாளும் அணுகுமுறை போன்றவை பற்றி எல்லாம் நன்கு அறிந்த ஒரு சட்டத்தரணி ரணில் விக்கிரமசிங்க. அத்தகையவர் இப்படி நீதிமன்ற அவமதிப்புக்கு வழி செய்யும் விதத்தில் இவ்விடயத்தைக் கையாள முயன்றமை ஆச்சரியத்துக்குரியது.

பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் சபாநாயகரை பிரதம நீதியரசருடன் தொடர்பு கொண்டு இணக்கமான ஏற்பாடு ஒன்றைச் செய்யுமாறு ஜனாதிபதி வழிப்படுத்துகின்றமை சட்ட முரணான அணுகுமுறையாகும்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை தவறு என்று தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட 9 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம், அதை ஒட்டிய விசாரணை முடியும் வரை தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பணிபுரிய இடைக்காலத் தடை விதித்தமையுடன், அதுவரை ஒரு பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் படி ஜனாதிபதிக்குப் பரிந்துரை தந்திருந்தது.

பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில் தமக்கு சிக்கல் இருப்பதாகக் கூறும் ஜனாதிபதி, இது குறித்து சபாநாயகரை பிரதம நீதியரசருடன் பேசித் தீர்வு காண வழிப்படுத்துகின்றார். அங்குதான் அவர் பெரும் தவறிழைக்கின்றார் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தேசபந்து தென்னக்கோன் தவறான முறையில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று சுட்டும் மனுதாரர்கள், இது விடயத்தில் அரசமைப்புக் கவுன்ஸிலின் தீர்மானத்தை சபாநாயகர் வேண்டுமென்றே திரித்து, தலைகீழாக மாற்றி, ஜனாதிபதிக்கு அறிக்கையிட்டதன் மூலமே தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த இடைக்கால உத்தரவு என்பது வெறுமனே தேசபந்து தென்னகோனுக்கு மட்டும் எதிரானது அன்று, அவரை அந்த பதவிக்கு உயர்த்துவதற்காக அரசமைப்புக் கவுனஸிலின் தீர்மானத்தை தவறாகத் திரித்து, ஜனாதிபதிக்கு அறிக்கையிட்ட சபாநாயகருக்கும் எதிரானது என்பது மறுக்கக்கூடியது அல்ல.

இது விடயத்தில் நீதிமன்றம் முழு விசாரணையை நடத்தி இறுதி முடிவை எடுக்கும் போதுதான் இவ்வகாரத்தில் சபாநாயகரின் நடத்தை பற்றிய இறுதியான தீர்மானமும் நீதிமன்றத்தில் வெளிப்படும்.

அதுவரையில் இந்த மனுக்களில் பிரதான குற்றச்சாட்டு சபாநாயகருக்கும் எதிரானதே. அத்தகைய சபாநாயகருடன் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம் குறித்து பிரதம நீதியரசர் பேசுவது என்பது வழக்கில் சம்பந்தப்பட்ட - குற்றம் சுமத்தப் பட்ட - தரப்புடன் பிரதம நீதியரசர் நேரடியாகப் பேசுவதற்கு ஒப்பானதாகும்.

ஆகவே அத்தகைய நடவடிக்கைக்கு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கவே மாட்டார் என்பது நிச்சயம்.

சபாநாயகர் சந்திக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, அதற்கு சந்திப்பு நேரம் ஒதுக்குமாறு கேட்டபோதும் அதற்கு பிரதம நீதியரசர் இடமளிக்க மறுத்துவிட்டார் என்ற தகவலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் கூறியிருக்கின்றார்.

வழக்கில் தவறிழைத்தவர் எனக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவருடன் வழக்கின் இடைக்கால உத்தரவு குறித்து பிரதம நீதியரசர் பேச்சு நடத்த வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்து முழு முட்டாள்தனமானது. இது, நீதித்துறை பரிபாலனத்தை ஏளனம் - கேலி - செய்யும் பாங்கிலான கோரிக்கையும் ஆகும்.



# கொழும்புத் துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்!

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான INS Shalki என்ற நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நேற்றுக் காலை வருகை தந்த கப்பலை இலங்கைக் கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

64.4 மீற்றர் நீளமுடைய INS Shalki கப்பலில் 40 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

INS Shalki கட்டளைத் தளபதி Commander Rahul Patnaik மற்றும் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி சிந்தக குமாரசிங்க ஆகியோருக்கு இடையே உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று கடற்படை தலைமையகத்தில் இடம் பெற்றது.

இந்தக் கப்பல் நாளை நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் மீறல்கள் தொடர்பில் 153 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் மீறல்கள் தொடர்பில் இதுவரை 153 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் பதிவாகியுள்ளன என்று ஆணைக்குழு கூறியுள்ளது.

அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை, நியமனங்களை வழங்கியமை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடைய முறைப்பாடுகளே இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன.




இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஜனாதிபதித் தேர்தல் மீறல் தொடர்பில் ஒரேயொரு முறைப்பாடு மாத்திரமே இதுவரை கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் காற்றாலை மின்னுற்பத்திக்கு எதிரான மனுக்களைப் பரிசீலிக்க உயர்நீதிமன்றம் முடிவு

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணிப் பணிகளை அதானி நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 5 அடிப்படை உரிமை மனுக்களை எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி விடயங்களை ஆராய்வதற்காக எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சமூக அமைப்புகளால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மத்திய ஆசிய பறவைகள் பாதையின் தென்திசையிலுள்ள பறவைகளின் தங்குமிடமான இலங்கை, புலம்பெயர் பறவைகளின் கேந்திர நிலையமாகக் காணப்படுவதாக மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் ஒரு மில்லியன் வரையான பறவைகள் குளிர்காலத்தின்போது இந்தப் பகுதிக்கு வருகை தருவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பறவைகளின் பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், புலம்பெயர் பறவைகளின் செயற்பாடுகளுக்குக் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்படும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காற்றாலை திட்டத்துக்கு அரசியல், வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தத் தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு எவ்வித விசேட காரணங்களும் இல்லை எனவும், குறித்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பகுதி எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்களது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்

## முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்து



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது )

தமிழக மீனவர்களது பிரச்சினைக்கு இலங்கையுடன் பேசி நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து உயரிய சிகிச்சை அளிக்கவும், இந்தப் பிரச்சினைக்கு இலங்கையுடன் பேசி நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டதில் இருந்து, தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி இடங்களில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும்போது, இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதும், சிறை பிடிக்கப்படுவதும், உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர் கதையாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், தற்போது தமிழக மீனவர்களின் படகின்மீது இலங்கைக் கடற்படையின் கப்பல் வேண்டுமென்றே மோதி மீனவர் மலைச்சாமி உயிரிழந்துள்ளார். மீனவர் மாயமாகியுள்ளார்என்ற செய்தி பேரதிர்ச்சியை அளிக்கிறது.

உயிரிழந்துள்ள மலைச்சாமி குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் விரைவில் பூரண குணமடைந்து இல்லம் திரும்ப வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இலங்கை கடற்படையினரின் இந்தச் செயல் தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் செயலாகும். ஒவ்வொரு முறை மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும்போதும் ஒருவித மான அச்ச உணர்வுடனேயே தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கிறார்கள்.

இலங்கை அரசின் இதுபோன்ற அத்துமீறிய செயல் ஒருவிதமான பதற்றத்தை தமிழக மீனவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இது மிகுந்த கவலை அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

இந்தச் சம்பவம் குறித்து டில்லியில் உள்ள இலங்கை அதிகாரிகளை நேரில் அழைத்து தனது கண்டனத்தை மத்திய வெளியுறவுத்துறை பதிவு செய்திருந்தாலும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு மத்திய அரசு சார்பில் இழப்பீடு வழங்கவும், இறந்த மீனவரின் உடலை தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரவும், மாயமான மீனவர் ராமச்சந்திரனின் உடலை மீட்டெடுத்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரவும் வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்துகிறேன். – என்றுள்ளது.

# வயநாடு நிலச்சரிவு நிவாரணத்துக்காக விடுதலைச் சிறுத்தைகள் ரூ.15 லட்சம்!

வயநாடு நிலச்சரிவு நிவாரணப் பணிகளுக்காக விடுதலைச் சிறுத்தைகள் கழகம் சார்பில் 15 லட்சம் ரூபா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கேரள மாநிலத்தில் நடந்துள்ள நிலச்சரிவுப் பேரிடரால் 200 இற்கும் மேற்பட்டோர் உயிருடன் புதையும் பெருந்துயர் நடந்துள்ளது. குடும்பம் குடும்பமாகப் பலியாகியுள்ளனர். புதையுண்டு பலியானோரின் உடல்கள் தற்போது மீட்கப்பட்டு வருகின்றன. எனினும், பலர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்பது சற்று ஆறுதல் அளிக்கிறது.

இப்பேரிடரை 'தேசியப் பேரிடராக' அறிவிக்க வேண்டுமென மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். அதன்படி பாதிக்கப்பட்ட பகுதியில் எஞ்சியுள்ளோரின் 'மறுவாழ்வு மற்றும் மறுகட்டுமானம்' ஆகியவற்றுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம். இப்பேரிடரை எதிர்கொள்ளும் கேரள மாநில அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில 15 லட்சம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படும்.– என்றுள்ளது.

# மோடியின் இலங்கை வருகை இரத்தானது!



இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை மற்றும் ஏனைய காரணிகள் காரணமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான திட்டமிடப்பட்ட உத்தியோகபூர்வ விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இந்திய அரசு தரப்பு இன்னும் இதனை உறுதிச்செய்யவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இதன்போது இலங்கையில் சில அபிவிருத்தி திட்டங்களை அவர் ஆரம்பித்து வைப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் தற்போதைய உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்றுள்ள இந்திய கடற்றொழிலாளரின் மரணச் சம்பவம் என்பவற்றை தொடர்ந்தே பிரதமரின் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் மரணம் தொடர்பில் இலங்கையிடம், இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

கடற்றொழிலாளர் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமானத்துடனும் கருணையுடனும் கையாள வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## இஸ்ரேலைத் தடுக்காவிட்டால்

# உலகுக்குப் பெரும் ஆபத்து என்கிறது ஈரான்

தெஹ்ரான், ஹமாஸ் ஆயுதக் குழுவின் தலைவரான இஸ்மாயில் ஹனியி (வயது 62) கடந்த புதன்கிழமை படு கொலை செய்யப்பட்டார். ஈரான் தலைநகர் தெஹ்ரா னில் உள்ள வீட்டில் இஸ்மாயில் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரது படுகொலைக்கு இஸ்ரேலை பழி வாங்குவோம் என ஈரான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலை தடுத்து நிறுத்தாவிட்டால் மத்திய கிழக்கு பகுதி மட்டுமின்றி, உலகத்துக்கே ஆபத்து என ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி அலி பாகரி கனி எச்சரித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

கடந்த பத்து மாதங்களில், இஸ்ரேல் காசா பகுதியில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இப்போது இஸ்ரேலின் குற்றங்கள் பெய்ரூட், தெஹ்ரான் மற்றும் ஏமன்வரை விரிந்துள்ளது.

இஸ்ரேலை தடுத்து நிறுத்தாவிட்டால், மத்திய கிழக்கு பகுதியின் அமைதிக்கும், பாதுகாப்பும் பாதிப்பு ஏற்படு வதும் மட்டுமின்றி, உலகத்துக்கே ஆபத்தாகும்.– என் றார்.

# ஈரானின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவுமாம்!

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் உறுதி!!

ஈரானின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக இஸ்ரேலின் பாது காப்புக்கான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி அளித்துள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே கடந்த புதன்கிழமை படு கொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட தற்குப் பழிவாங்க இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரானிய உச்ச தலைவர் அலி கமேனி அறிவித் தார். இதனால், இஸ்ரேல் – ஈரான் இடையே பதற்றம் அதிக ரித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொலை பேசியில் பேசியதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தொலைபேசியில் பேசி னார். அப்போது, இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் நேரடி தாக்குதல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அமெரிக்க ராணுவத்தை நிலைநிறுத்துவது குறித்து விவாதித்தார்.

ஹமாஸ், ஹிஸ்புல்லா மற்றும் ஹொதிகள் உட்பட ஈரா னின் அனைத்து அச்சுறுத்தல்களில் இருந்தும் இஸ்ரேலை பாதுகாப்பதற்கான தனது உறுதிப்பாட்டை ஜனாதிபதி பைடன் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இஸ்ரேலின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளோடு, பிராந்தியத்தில் அதிகரித்துவரும் பதற்றங்களைத் தணிப் பதற்கான தொடர் முயற்சிகளின் முக்கியத்துவத்தையும்



அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்தினார். அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரிஸும் இந்த அழைப்பில் இணைந்தார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஈரான் எத்தகைய தாக்குதல்களை நடத்த முற்பட்டாலும் அதனை எதிர்கொள்ள இஸ்ரேலிய தற்காப் புப் படைகள் தயார் நிலையில் இருப்பதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு!

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களையும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டம் தொடர்பில் அவர்களை மீண்டும் தெளிவுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதனிடையே, அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற நிறுவனங்களின் பிரதானிகளையும் கொழும்புக்கு அழைத்து தேர்தல் சட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# 30 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்யத் திட்டம்

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை 30 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை விலை அதிகரிப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், இம்மாதம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 38 அல்லது 40 ரூபாவுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சந்தையில் முட்டை விலையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், கேக் மற்றும் பேக்கரி தொழிலுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிக்கும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் கூறியுள்ளார்.



# இணைய விசா முறையை மாற்றியமைக்கும் அமைச்சரவை முடிவுக்கு இடைக்காலத் தடை

இணைய விசா இலத்திரனியல் பயண அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கையைத் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கும் அமைச்சரவைத் தீர்மானத்தை அமுலாக்க உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தற்போதுள்ள இணைய விசா முறையை மாற்றி இலத்திரனியல் பயண அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கையை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. மேற்படி அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்தவே உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்துள்ளது.



# ரணிலை நான் சந்திக்கவில்லை

## மஹிந்த விளக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தனக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது என்று வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கப் பதிவொன்றின் மூலம் இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சில தரப்பினர் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு முயற்சிக்கின்றனர் எனவும் அந்தப் பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.







# உயிரிழந்த இந்திய மீனவரின் சடலம் இன்று உறவினர்களிடம் ஒப்படைப்பு

## சட்ட நடவடிக்கை ஏதும் இன்றி விடுவிக்கப்பட்ட இரண்டு மீனவர்களும் தாயகம் திரும்பினார்கள்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதில் உயிரிழந்த இந்திய மீனவரின் சடலம் இலங்கைக் கடற்படையினரின் படகில் நேற்று இரவு எடுத்துச் செல்லப்பட்டு இந்தியக் கரையோரக் காவல்படையினரிடம் கையளிக்கப் பட்டது.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் கடந்த புதன்கிழமை அன்று எல்லை தாண்டி உட்புகுந்த இந்தியாவின் இராமேஸ்வரம் படகு மீது இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்ததோடு இரு மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதோடு ஒருவர் காணாமல்போயிருந்தார்.

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு நேற்று பிரேத பரிசோதனையின் பின்னர் இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இதேபோன்று உயிருடன் பிடிபட்ட இரு மீனவர்களும் சட்ட நடவடிக்கை ஏதும் இன்றி இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு உயிருடன் கையளிக்கப்பட்ட இரண்டு மீனவர்களுடன் உயிரிழந்த மீனவரின் சடலமும் நேற்று இரவு 9.30 மணிக்கு இலங்கைக் கடற்படையினரின் விசைப்படகில் எடுத்துச் செல்லப்பட்டு சர்வதேச எல்லைப் பரப்பில் வைத்து இந்தியக் கரையோரக் காவல் படையின் பித்திரா படகில் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்த இராமேஸ்வரம் மீனவரின் சடலம் இன்று காலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அதேவேளை, சட்ட நடவடிக்கை ஏதும் இன்றி விடுவிக்கப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் இருவரும் இன்று காலை உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளனர்.




# இலங்கையில் அடுத்த ஆண்டு முதல் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

## யாழில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இளைஞர்களுக்கு தொழில் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் என்றும், அதற்காக அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே தமது நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கடந்த 4 வருடங்களாக இலங்கையின் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க முடியவில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டிருப்பதால் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், அதனால் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களைச் செயற்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட இளைஞர்களுடனான சந்திப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

“செழிப்பான எதிர்காலத்திற்கான பயணம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை அரசு ஒருபோதும் மறக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

நிதிப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு இவ்வருடம் நிதி ஒதுக்கியுள்ளது என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, ஆசிரியர் சேவையில் புதியவர்களை இணைத்துக்கொள்வதற்கு அடுத்த வருடம் மேலதிக நிதியை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுயதொழிலில் ஈடுபட விரும்பும் இளைஞர்களுக்கு நிவாரணத்துடன் கூடிய கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தில் இணைந்து இளைஞர்கள் முன்னோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, அவர்களின் தகவல்களைக் கேட்டறிந்துகொண்டதோடு சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்காலத்தில் அனுபவத்தைப் பொருட்படுத்தாமல் தனியார் துறை தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு தனியார் துறையிடம் கோரிக்கை விடுப்பதாகவும் உறுதியளித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்சியில் கலந்துகொண்டனர்.








# அரச தலைவர் ஒட்டுமொத்த நாட்டுக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

"இலங்கையுடனான உடன்பாட்டில் திருத்தங்களைச் செய்து, அதன் மூலம் நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளைச் சந்தித்தபோது குறிப்பிட்டேன். இந்தச் செயன்முறையில் தியாகங்களைச் செய்யும்போது, அனைவரும் அதில் பங்கேற்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முதல் தியாகத்தை அரச தலைவரே செய்ய வேண்டும். அரச தலைவர் ஒட்டுமொத்த நாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். எனினும், இலங்கையில் அது தலைகீழாகவே நடந்துள்ளது.



உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், பெரும் செல்வந்தர்களைக் காப்பாற்றி விட்டு, நாட்டில் உழைக்கும் மக்களின் நலனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் பெரும் செல்வந்தர்கள், பணக்காரர்கள் எனச் சகலரும் இந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும்." – என்றார்.













# யாழில் ரணில் - அங்கஜன் விசேட சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், யாழ். மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கைகள் தொடர்பாகவும் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் பல கோரிக்கைகளை அங்கஜன் இரானாதன் ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அங்கஜன் இராமநாதன் எம்.பி

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை மையப் படுத்திய முன்மொழிவுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளடக்கும் போது எமது மக்கள் அவருக்கான ஆதரவை வழங்குவார்கள்.

அரசியல் தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, முன்னாள் போராளிகளுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள், வடக்கின் துரித பொருளாதார மேம்பாடு, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், அத்தியாவசிய தேவைகள் உள்ளிட்ட கோரிக்கைகள் எங்கள் மக்களின் நீண்ட கால கனவுகளாக உள்ளன.

அவற்றை நிறைவேற்றவல்ல தலைமைத்துவத்தையே எங்கள் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த தலைவர் என்ற மதிப்பை மக்கள் உங்களிடத்தில் கொண்டுள்ளார்கள்.

ஆகவே, எங்கள் மக்கள் தொடர்பிலும் சிந்திக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை வைக்கின்றேன்." – என்றார்.













# இன்றைய ராசி பலன்கள் - 03.08.2024



மேஷம்

இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இருப்பினும் மேற்கொண்டு செல்வதற்கு சில உந்துதல்கள் தேவைப்படுகின்றது. இன்று உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும்.

பணியிடத்தில் பொறுமை தேவை. பலன்கள் உங்க ளுக்கு சாதகமாக அமைய கடினமாக உழைக்க வேண்டும்.

நல்லுறவை ஏற்படுத்த துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த அணுகுமுறை மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன்கள் வாங்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். நம்பிக்கை மனப்பான்மை ஆரோக்கியத்தை தக்க வைக்கும்.



ரிஷபம்

இன்று நிலுவையில் உள்ள பணி களை செய்வதற்கு உந்துதல் கிடைக்கும். உங்கள் முயற்சி மூலம் இன்றைய நாளை வளமாக்கலாம்.

நீங்கள் செய்யும் பணி உங்களுக்கு திருப்தி அளிக்கும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையை நீங்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்துகொள்வீர்கள்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் திருப்தி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.



மிதுனம்

இன்றைய நாள் மிதமான பலன் களைத் தரும். யதார்த்தமான அணுகு முறை மூலம் நீங்கள் நல்ல பலன்க ளைக் காணலாம். எதிர்மறை எண் ணங்களை கைவிடுங்கள்.

பணியிடத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். இதனை சமாளிக்க நீங்கள் திட்டமிட வேண்டும். சிறப்பான முறையில் தகவல்களைப் பரிமாற்ற வேண்டும்.உறவில் நல்லிணக்கத்தைப் பேணஎந்தச்சூழ்நிலையிலும்உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவில் காணப் படாது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்க வேண்டியிருக்கும்.இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.



கடகம்

ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். இதனால் நற்பலன்கள் கிடைக்கும். எளிதில் உணர்சிவசப்படு வீர்கள். இதனை தவிர்த்துவிடுங்கள். இன்று முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

பணியில் கவனம் செலுத்துங்கள். கவனச் சிதறலால் தவறுகள் ஏற்படும்.

உறவின் நல்லிணக்கத்தை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் மகிழ்ச்சி கெட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் ஆடம்பர செலவுகளை விட்டுக்கொடுக்க வேண்டும்.

ஜீரணக் கோளாறு, தோள் வலி போன்ற உபாதைகள் ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியமாக உணரலாம்.



சிம்மம்

இன்று வெற்றி பெறுவதற்கு யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலாது. பணிகளைக் கையாளும்போது தவறுகள் நேராத வண்ணம் கவனம் தேவை.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இந்த அணுகுமுறையால் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வகை அறிய வேண்டும்.

தொண்டை பாதிப்புகளுக்கு ஆளாக நேரலாம். கண்களில் எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என்பதால் கண் சிகிச்சை மேற்கொள்வது நல்லது.



கன்னி

இன்று உற்சாகமான நாள். இன்றைய நாளை திருப்தியுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணிச்சூழல் ஆக்கப்பூர்வமான பலன்களைத் தரும். உங்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

உங்களின் சகஜமான அணுகுமுறை மூலம் உங்கள் துணையிடம் அன்பை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. பணத்தை சேமிக்கும் நல்ல சூழ்நிலை காணப்படுகின்றது.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொடர்ச்சியான தியானப் பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.



துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். புதிய நண்பர்கள் மற்றும் புதிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் பணிக்கு நல்ல கருத்துக் கணிப்பு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு வலுப்படும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பக்திப் பாடல்கள், ஸ்லோகங்கள் கேட்பதன் மூலம் இன்னும் ஆரோக்கியமாக இருக்கலாம்.



விருச்சிகம்

உங்கள் செயல்களை ஆற்றும் பொழுது கவனமாக இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்கக் கூடாது.

பணியிடத்தில் நல்ல பலன்களைப் பெற அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சிறந்த பணி நடைமுறைகளை உருவாக்கி உங்கள் திறமைகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

உங்கள் துணையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக காணப்படாது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று நீங்கள் எளிதில் சோர்வடைவீர்கள். தோல் ஒவ்வாமையிலிருந்து தப்பிக்க எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.08.2024




இன்று சுமாரான நாள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உறுதியுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் பதற்றமான நிலை காணப்படும். பணிச்சுமையை சமாளிக்க சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிக்க விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமானதாக இல்லை. உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

பதற்றப்படாமல் இருங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




உங்கள் முயற்சியில் வெற்றி பெற உகந்த நாள். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான உறவு காணப்படும். இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சாதகமான நாள். இன்று கூடுதல் பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு திட்டமிடலாம்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மற்றும் கட்டுப்பாடு மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிபீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வழியில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். யோகா பயிற்சி சிறந்த பலனைத் தரும்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். கவனக் குறைவாக இருந்தால் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே நகைச்சுவையுடன் கூடிய அணுகுமுறை திருப்தியை அளிக்கும்.

உங்கள் கீழ் பணி புரிபவர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை கவனமுடன் கையாள வேண்டும்.

நட்பான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் இருவரும் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம். நல்லுறவிற்கு இது மிகவும் அவசியம்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் கண்களை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தியானப் பயிற்சி மூலம் அமைதி பெறலாம்.




